தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டு 12
# தமிழ் அறிவுப்போட்டி 2020

# Year 12
## Tamil Language Skills Competition 2020

# தமிழ் அறிவுப்போட்டி 2020

## ஆண்டு 12

ஆரம்பப் போட்டி – 30 கேள்விகள்

இதில் மூன்று சுற்றுக்கள் உள்ளன.

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டு 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

முதல் சுற்று 10 கேள்விகள்

ஆசிரியரால் வாசிக்கப்படும்

1.

இரண்டு வரிகளில் சிறந்த கருத்துக்களை கூறி உலகப் புகழ் பெற்ற தமிழ் நூல் எது?

1. விடை:

**திருக்குறள்**

2.

எமது கல்வி நிலையத்தின் சின்னத்தில் உள்ள வாசகம் என்ன?

2. விடை:

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

3.

ஆத்திசூடி, மூதுரை என்பவை ஔவையார் இயற்றிய இரு நூல்களாகும்.

அவர் இயற்றிய வேறு இரு நூல்கள் எவை?

3. விடை: (ஏதாவது இரண்டு)

கொன்றைவேந்தன், நன்னெறி, நல்வழி

4.

**பின்வரும் திருக்குறளை நிறைவு செய்க.**

முகநக நட்பது __________ __________
அகநக நட்பது நட்பு

4. விடை:

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

5.

எமது கல்வி நிலையக் கீதத்தின் முதல் வரி என்ன?

5. விடை:

தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ்

6.

"உருத்திராக்கப் பூனை போல" என்ற உவமைச் சொற்றொடரின் கருத்து விளக்கம் என்ன?

1. பிரிவுத் துயர்
2. அனுபவம்
3. வெளிவேடம்

6. விடை:

   3. வெளிவேடம்

7.

**‘ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்த மானந்தம் தோழர்களே!’ என்னும் பாடல் அடிகளுக்குப் பொருத்தமான புலவர் யார்?**

- புகழேந்திப் புலவர்
- சோமசுந்தரப் புலவர்

7. விடை:

**சோமசுந்தரப் புலவர்**

**8.**

'சொன்ன சொல் தவறுதல்' என்ற பொருளைக் குறித்து நிற்கும் மரபுத் தொடரை தெரிவு செய்க

1. நாக்குப் புரளுதல்
2. நாக்கு நீளுதல்
3. நறுக்காயிருத்தல்

8. விடை:

1. நாக்குப் புரளுதல்

9.

தமிழ் மறை என அழைக்கப்படும் நூல் எது?

- சிலப்பதிகாரம்
- திருக்குறள்
- பகவத்கீதை

9. விடை:

**திருக்குறள்**

10.

‘ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
**இசை**கொண்டு வாழியவே’

என்பதில் வரும் ‘**இசை**’ என்பதன் பொருள் என்ன?

10. விடை:

புகழ்

முதற் சுற்று முடிவடைந்தது.

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11.

‘அரிவையரும் ஆடவரும் ஓடிவந்தார் கல்வியோடு கலைகளையும் கற்றறிந்தார்.

அரிவையரும் ஆடவரும் இங்கு கற்பது என்ன?

(இரண்டு பதில்கள் கூற வேண்டும்)

11. விடை:

கல்வி

கலைகள்

12.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பது புறநானூறு.

இங்கு ‘கேளிர்’ என்பதன் பொருள் என்ன?

12. விடை:

சுற்றம்

13.

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்’ என்ற பாடலைப் பாடியவர் யார்?

13. விடை:

பாரதிதாசன்

14.

‘classical language’ என்பதன் தமிழ்ப்பதம் என்ன?

14. விடை:

**செம்மொழி**

15.

காரணம் எதுவுமின்றி இடுகுறிப் பெயராக வழங்கி வரும் சொல் எது?

1. நாற்காலி
2. கரும்பலகை
3. மேசை
4. பறவை

15. விடை:

**3. மேசை**

16.

**இரட்டைக்கிளவி** என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒரு தன்மைப் பட்டு நின்று, வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவதாகும்.

இது இரட்டைச் சொல்லாகவே வரும்.

பிரித்தால் பொருள் தராது.

பின்வருவனவற்றில், எது இதற்கமையாதது:

- நீர் சலசல என ஓடியது
- தரதர என்று இழுத்து சென்றான்
- ஆடிஆடி நடந்து வந்தான்

16. விடை:

ஆடிஆடி நடந்து வந்தான்

17.

“உள்ளங்கை நெல்லிக்கனிபோல”

இதன் கருத்தென்ன?

17. விடை:

வெளிப்படையாகத் தெரிதல்

18.

‘இரண்டும் கெட்டான்’ என்ற பொருளைக் குறித்து நிற்கும் மரபுத் தொடரை தெரிவு செய்க

1. எளிதில் ஏமாறுபவன்
2. நன்மை தீமை அறியாதவன்
3. ஏமாற்றுக்காரன்

18. விடை:

2. நன்மை தீமை அறியாதவன்

19.

உயிர்நெடில் எழுத்துக்கள் எவை?

1. அ, ஆ, இ, ஈ, ஒ
2. அ, இ, உ, எ, ஒ
3. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

19. விடை:

3. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

20.

பாடல் அடியை நிறைவு செய்க:

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்’

________________________________

20 விடை:

மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று 10 கேள்விகள்

21.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல – தன்னை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

இக் குறளில் வலியுறுத்தப்படும் விடயம் என்ன?

1. உண்மை
2. நேர்மை
3. பொறுமை
4. வலிமை

21. விடை:

3. **பொறுமை**

22.

தமிழின் முதல் இலக்கண நூல் எது என்று இன்றும் அறியப்படுகிறது?

22. விடை:

அகத்தியர் எழுதிய அகத்தியம்

23.

பொருத்தமான அடுக்கு மொழியைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக:

| | |
|---|---|
| தாரைதாரையாக | துள்ளித் துள்ளி |
| ஆடி ஆடி | விழுந்து விழுந்து |

அவள் புள்ளிமானைப் போலத்
__________ __________ ஓடிவந்தாள்.

23. விடை:

துள்ளித் துள்ளி

# அட்டவணை கேள்விகள்

சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

**குறிப்பு:**

அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்

உதாரணக் கேள்வி:

மறுபிறப்பு என்ற சொற்றொடரின் பொருளைத் தருகின்ற வேறொரு சொற்றறொடர் எது?

பதில்: **H4** புனர் ஜென்மம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

# 24. மகிழ்ச்சியின் வெளிப்பாடு இது

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | றா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

# 24. மகிழ்ச்சியின் வெளிப்பாடு இது

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

விடை: **D7 – சிரிப்பு**

## 25. அதிகாலையில் தோன்றுகின்ற நட்சத்திரம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

# 25. அதிகாலையில் தோன்றுகின்ற நட்சத்திரம்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

**விடை: C6 – விடிவெள்ளி**

26. கவிஞன் என்ற சொல்லுக்குரிய இரண்டு ஒத்த சொற்கள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

# 26. கவிஞன் என்ற சொல்லுக்குரிய இரண்டு ஒத்த சொற்கள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

விடை: C5 – கவி

D9 – பாவலன்

27. பல்வேறு விடயங்களையும் கற்றறிந்தவனைக் குறிக்கும் மரபுத் தொடர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

## 27. பல்வேறு விடயங்களையும் கற்றறிந்தவனைக் குறிக்கும் மரபுத் தொடர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

**விடை: A4 – கரைகண்டவன்**

# 28. கிழமை ஒன்றின் பெயர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ந | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ந | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

28. கிழமை ஒன்றின் பெயர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | உ | ரி | மை | க | ள் | க | ட | மை | க | ள் | ப |
| B | ற | கு | தி | ரை | உ | ண் | டா | ள் | மு | நா | ண் |
| C | வு | தி | லி | க | க | வி | டி | வெ | ள் | ளி | டி |
| D | மு | க் | க | ண் | ஆ | ழி | சி | ள் | பா | து | கை |
| E | றை | கி | இ | ட | ர் | த் | ரி | ள | வ | ற | க |
| F | ச் | ன் | ன் | வ | த் | தா | ப் | ம் | ல | வி | ள் |
| G | சொ | றா | ப | ன் | தி | ன் | பு | அ | ன் | பு | வ |
| H | ல் | ன் | ம் | பு | ன | ர் | ஜெ | ன் | ம | ம் | லு |

விடை: C8 – வெள்ளி

29.

கவிதைக்கு அழகு சேர்க்கும் அடிப்படையான இரு விடயங்களை தருக.

29. விடை:

எதுகை மோனை

ஓசை

30.

பொருத்தமான அடுக்கு மொழியைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக:

| | |
|---|---|
| தாரைதாரையாக | துள்ளித் துள்ளி |
| ஆடி ஆடி | அரக்கப் பறக்க |

அவசரம் புரியாத வேலைக்காரன் ________ ________ மெதுவாக வந்தான்.

30. விடை:

ஆடி ஆடி

மூன்றாம் சுற்று

முடிவடைந்தது.

# அரை இறுதிச்சுற்று

## 15 கேள்விகள்

1.

மாதம் என்பதையும், நிலவு, சந்திரன் என்பவற்றையும் குறித்து வரும் ஒரு சொல் எது?

1. விடை:

**திங்கள்**

2.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

இப்பாடலில் இரண்டு உறுப்புக்களின்
பெயர்கள் உள்ளன.
அவை எவை?

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.

2. விடை:

வாய், கால்

3.

குறிஞ்சிக் கவி பாடுவதில் வல்ல சங்கப் புலவர் யார்?

1. நக்கீரர்
2. பரணர்
3. கபிலர்
4. பூங்குன்றனார்

விடை:

3. கபிலர்

# அட்டவணை கேள்விகள்

சொல்லாக்கம்
விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

**குறிப்பு:**
அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்

## உதாரணக் கேள்வி

**இலங்கையின் வட பகுதியில் இருக்கும் ஒரு தமிழர் நகரம்**

**குறிப்பு:** அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

**விடை: A1 – யாழ்ப்பாணம்**

Year 12 - 2020

4. விபுலானந்த அடிகள் எழுதிய ஒரு நூல்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

4. விபுலானந்த அடிகள் எழுதிய ஒரு நூல்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

விடை A1 - யாழ்நூல்

5. காளமேகப் புலவர் என்ன கவி பாடுவதில் வல்லவர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

5. காளமேகப் புலவர் என்ன கவி பாடுவதில் வல்லவர்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஒள | வை | யா | ர் |

விடை B3 – வசைக்கவி

6. சங்க காலத்தில் ஆயர்கள் வாழ்ந்த நிலமாகக் குறிப்பிடப் படுவது எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

6. சங்க காலத்தில் ஆயர்கள் வாழ்ந்த நிலமாகக் குறிப்பிடப் படுவது எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | யா | ழ் | ப் | பா | ண | ம் | தி | ந |
| B | ழ் | ஆ | வ | ட | ற | து | ப் | வா |
| C | நூ | த் | சை | க | ல் | ல | ணை | லி |
| D | ல் | தி | க் | ர் | மு | ல் | லை | யூ |
| E | எ | சூ | க | க | ம் | ஓ | பு | ர் |
| F | உ | டி | வி | ள் | ஔ | வை | யா | ர் |

விடை D5 – முல்லை

7.

போர்க்களத்தைப் பற்றியும்,
போரிலே மன்னன் பெற்ற வெற்றியைப் பற்றியும் பாடுகின்ற சிற்றிலக்கிய வடிவம் யாது?

1. உலா
2. வெண்பா
3. பரணி
4. பிள்ளைத் தமிழ்

7 விடை:

3. பரணி

8.

பின்வரும் உவமையால் விளக்கப்பெறும் பொருள் யாது?

எலியும் பூனையும் போல

1. ஏமாற்றம்
2. ஒற்றுமை
3. நட்பு
4. பகை

8. விடை:

4. பகை

9.

பழமொழிக்கு பொருத்தமான வாக்கியத்தைக் கூறவும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

1. நாம் ஒன்றுபட்டுப் பணம் திரட்ட வேண்டும்
2. ஒற்றுமையே பலம்
3. எமது வாழ்க்கை சிறக்க முயற்சிக்க வேண்டும்.

9. விடை:

2. ஒற்றுமையே பலம்

10. பொருத்தமான இரட்டைச் சொல்லை தெரிவு செய்க

____________ என தென்றல் காற்று வீசியது.

1. குளுகுளு
2. கமகம
3. படபட
4. குடுகுடு

10. விடை:

1. குளுகுளு

11.

‘ஆற்றில் கரைத்த புளி போல’ என்ற உவமைத் தொடரின் பொருள்

1. முயற்சியுடமை
2. பயனற்ற செலவு
3. ஒற்றுமை
4. நிலையில்லாமை

11. விடை:

2. பயனற்ற செலவு

12.

ஆத்திசூடி என்ற நீதி நூலின் முதல் வரி எது?

12. விடை:

‘அறம் செய விரும்பு’

13.

காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கி கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ.

இதில் செம்பரிதி என்பது எதனைக் குறிக்கிறது?

13. விடை:

சூரியன்

14.

சிட்னி தமிழ் அறிவகம் வருடம் தோறும் நடாத்தும் கொடிதினம் எதற்காக நடாத்தப் பெறுகிறது?

14. விடை:

யாழ் நூலகம் எரிக்கப்பட்ட தினத்தை நினைவு கூருவதற்காக

15. இடைவெளியை நிரப்புக.

வெள்ளம் ________________ கூடியது.

1. சலசலவென்று
2. கலகலவென்று
3. மளமளவென்று

15. விடை:

3. மளமளவென்று

# அரை இறுதிச் சுற்று முடிவுற்றது

இறுதிச்சுற்று

15 கேள்விகள்

1\.

ஐம்பெரும் காப்பியங்களில் தமிழன்னையின் கைகளுக்குரிய ஆபரணமாக எழுதப்பட்ட காப்பியம் எது?

1. விடை:

வளையாபதி

**2.**

‘கிணற்றுத் தவளை போல’ என்ற உவமைத் தொடரின் பொருள் என்ன?

1. துன்பப் படுதல்
2. உலக விடயங்களை அறியாதிருத்தல்
3. முடியாத காரியம்

2. விடை:

2. உலக விடயங்களை அறியாதிருத்தல்

3. பின்வரும் தொடர்களுள் பொருளால் வேறுபடும் தொடர் எது?

1. வலையில் சிக்கிய மான் போல
2. தூண்டிலில் அகப்பட்ட மீன் போல
3. அத்தி பூத்தாற் போல

3. விடை:

**3. அத்தி பூத்தாற் போல**

# அட்டவணை கேள்விகள்

சொல்லாக்கம்
விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

**குறிப்பு:**
அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்

**உதாரணக் கேள்வி:**

தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து அவனுடைய நகர வர்ணனை, நாட்டு வர்ணனை, வீரச்செயல்கள் போன்றவற்றைக் கூறும் சிறந்த இலக்கியங்கள் இரண்டு இடங்களில் வந்துள்ளன. அவை எவை?

**பதில்: A3, G4 காப்பியங்கள்**

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **A** | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| **B** | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| **C** | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| **D** | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| **E** | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| **F** | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| **G** | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

4. காப்பியங்களில் இரண்டு வகைகள் எவை?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

4. காப்பியங்களில் இரண்டு வகைகள் எவை?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | றை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

விடை: A1 – சிறு காப்பியங்கள்

G1 – பெருங் காப்பியங்களள

5. குறிக்கோள் என்னும் பொருளில் அமைந்துள்ள சொல் எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

5. குறிக்கோள் என்னும் பொருளில் அமைந்துள்ள சொல் எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

விடை: **C7** – இலக்கு

6. பிரதம மந்திரி, சனாதிபதி போன்றோருக்கு முப்படையினர் கொடுக்கும் மரியாதை

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

6. பிரதம மந்திரி, சனாதிபதி போன்றோருக்கு முப்படையினர் கொடுக்கும் மரியாதை

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | றை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

விடை: **A10 – அணிவகுப்பு**

7. அல்லி, செங்கழுநீர் என்பன குளங்களில் மலரும் மலர்களாகும்.
அதே இனத்தைச் சேர்ந்த வேறொரு மலர் எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

7. அல்லி, செங்கழுநீர் என்பன குளங்களில் மலரும் மலர்களாகும்.
அதே இனத்தைச் சேர்ந்த வேறொரு மலர் எது?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

விடை: **B8** – தாமரை

8. ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று இது

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

8. ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று இது

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | சி | று | கா | ப் | பி | ய | ங் | க | ள் | அ |
| B | ல | மு | சீ | வ | க | சி | ந் | தா | ம | ணி |
| C | ம் | த் | ல | ர | லை | ற | இ | ம | சூ | வ |
| D | பு | த | ம் | வே | க | கு | ல | ரை | ளா | கு |
| E | அ | மி | வ | ற் | ள் | ப | க் | ப் | ம | ப் |
| F | ணி | ழ் | ரு | பு | ய | ல் | கு | பூ | ணி | பு |
| G | பெ | ரு | ங் | கா | ப் | பி | ய | ங் | க | ள் |

விடை: C9 – சூளாமணி

9.

எட்டுத் தொகை நூல்களில் இரண்டைக் குறிப்பிடுக.

9. விடை:

நற்றிணை,
குறுந்தொகை,
ஐங்குறுநூறு,
பதிற்றுப் பத்து,
பரிபாடல்,
கலித்தொகை,
அகநானூறு,
புறநானூறு

10.

சிலப்பதிகாரம்

மணிமேகலை

சீவகசிந்தாமணி

வளையாபதி

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று இதில் தரப்படவில்லை. அதன் பெயர் தருக.

10. விடை:

குண்டலகேசி

11.

பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க:

வஞ்சினம் என்பது:

1. வருந்தினர்
2. கடுங்கோபம்
3. ஒழுக்கம்
4. சபதம்

11. விடை:

2. கடுங்கோபம்

12.

பொருத்தமானதைத் தெரிவு செய்க:

உப்பில்லாப் பேச்சு என்பது

1. நம்பமுடியாத பேச்சு
2. சுவையுள்ள பேச்சு
3. பயனற்ற பேச்சு
4. அறியாமைப் பேச்சு

12. விடை:

3. பயனற்ற பேச்சு

13.

தமிழ் எழுத்துக்களின் நான்கு வகைகளும் எவை?

13. விடை:

உயிர் எழுத்துக்கள்,

மெய் எழுத்துக்கள்,

உயிர் மெய் எழுத்துக்கள்,

ஆய்த எழுத்து

14.

“கையை விரித்தல்” என்ற தொடரின் கருத்து ‘உதவி செய்ய மறுத்தல்’.

அதுபோல “**உச்சி குளிருதல்**” என்பதன் கருத்து என்ன?

14. விடை:

மிகவும் மகிழ்ச்சியடைதல்

15.

பழமொழிக்கு பொருத்தமான வாக்கியத்தைக் கூறவும்.

**வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்**

1. வெள்ளத்துக்குப் பெரிய அணை கட்டவேண்டும்
2. அணையை ஆழமாகப் போடவேண்டும்
3. நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக நடக்க வேண்டும்

15. விடை:

3. நாம் எக்காரியத்திலும் முன்னேற்பாடாக நடக்க வேண்டும்

இறுதிச்சுற்று  முடிவுற்றது.

நன்றி!

மேலதிகக் கேள்விகள் தேவைப்பட்டால்……….

1. பின்வரும் விடுகதைக்கு விடை சொல்லுங்கள்.

ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டு போகிறார்.

அவர் யார்?

1. விடை:

நுளம்பு